3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடு)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் எது பேசினாலும் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள்.

***திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் தலைவராக என்னைத் தேர்ந்தெடுத்து பெருமை சேர்த்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பிலும், அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பிலும் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2013–2014 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 150 முதல் 162 வரையிலான 13 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

(ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி, யாதொரு பிரதிபலனும் கருதாமல் மக்கள் நலன் என்கிற ஒற்றை இலட்சியத்தோடு நீதிமுறை தவறாத பொற்கால ஆட்சியை நடத்தி, அனைத்துத் தரப்பு